

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (13.07.2023) ஆணையர் அலுவலகத்தில் அழகர்கோயில், மருதமலை, மேல்மலையனூர், சிறுவாபுரி, குமாரவயலூர் ஆகிய திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி.ந.திருமகள், திருமதி.சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் சி.இசையரசன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கொடநாடு கொலை - கொள்ளை வழக்கு - சொத்துக்குவிப்பு போன்ற புகார்களின் மீது

# விசாரணை தீவிரம் - அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கலக்கம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 14-

ஊழல், சொத்துக்குவிப்பு புகார், கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை என விசாரணை தீவிரமடையும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அச்சத்தால் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கலக்கத்தில் உள்ளனர் என ‘தினகரன்’ நாளேடு 13.7.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-



தினகரன்

ஜூலை 13, 2023 வியாழக்கிழமை

அச்சத்தில் அதிமுக

கடந்த 2011 - 21 வரை நடந்த அதிமுக ஆட்சியின்போது அமைச்சர்களாக பணியாற்றியவர்கள் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக, 2016 - 21ல் அமைச்சர்களாக இருந்தவர்கள் கோடிக்கணக்கில் சொத்துகள் சேர்த்துள்ளதாக புகார் எழுந்தது.

திமுக ஆட்சிக்கு வந்த பின் அதிமுகவின் முக்கிய புள்ளிகளான முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், வேலுமணி, தங்கமணி, வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். தற்போது அடுத்தக்கட்டமாக அதிமுக ஆட்சிக்காலத்தில் உணவுத்துறை அமைச்சராக பணியாற்றிய காமராஜ், வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை குவித்துள்ளதாக புகார் எழுந்தது. இதனைத்தொடர்ந்து காமராஜ் மற்றும் அவரது குடும்பத்தினரின் வீடுகளில், லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

2011-21 வரை நடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது அமைச்சர்களாக பணியாற்றியவர்கள் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக, 2016 - 21ல் அமைச்சர்களாக இருந்தவர்கள் கோடிக்கணக்கில் சொத்துகள் சேர்த்துள்ளதாக புகார் எழுந்தது. திமுக ஆட்சிக்கு வந்த பின் அ.தி.மு.க.வின் முக்கிய புள்ளிகளான முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், வேலுமணி, தங்கமணி, வீரமணி, எம்.ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

தற்போது அடுத்தக்கட்டமாக அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உணவுத்துறை அமைச்சராக பணியாற்றிய காமராஜ், வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை குவித்துள்ளதாக புகார் எழுந்தது.

இதனைத்தொடர்ந்து காமராஜ் மற்றும் அவரது குடும்பத்தினரின் வீடுகளில், லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். மொத்தம் 127 கோடியே 49 லட்சத்து 9 ஆயிரத்து 85 ரூபாய் அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக காமராஜ் சொத்து சேர்த்துள்ளதாக, 810 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே அ.தி.மு.க. மாஜி அமைச்சர்களான சி.விஜயபாஸ்கர் மீது ரூ.35.79 கோடி, கே.பி.அன்பழகன் மீது ரூ.45.20 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்பு போலீசார் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளில் மேல் நடவடிக்கைகளுக்கு உரிய விசாரணை நடத்துவதற்கு அனுமதி தராமல் ஆளுநர் ஆர்.என்.ரவி நீண்ட காலமாக இழுத்தடித்து வருகிறார். இதுதொடர்பான விசாரணைக்காக அனுமதி கோரும் சி.பி.ஐ.யின் கோரிக்கை, தமிழக அரசு சார்பில் ஆளுநர் அலுவலகத்திற்கு கடந்த 12.9.2022 அன்று அனுப்பப்பட்டது.

இந்த கடிதத்திற்கு ஆளுநர் அலுவலகத்தில் இருந்து எந்த பதிலும் இதுவரை, தமிழக அரசுக்கு கிடைக்கப் பெறவில்லை. முன்னாள் அமைச்சர் வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீதும் நீதிமன்ற விசாரணையை தொடங்க அனுமதி கோரி, அனுப்பிய கடிதங்களையும் ஆளுநர் நிலுவையில் வைத்துள்ளார். இதன் மூலம் அ.தி.மு.க. மாஜி அமைச்சர்கள் மீதான நடவடிக்கைகளை மேலும் தாமதப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஆளுநர் இறங்கியுள்ளாரோ என எண்ணத் தோன்றுகிறது.இது ஒருபுறமிருக்க, கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பான விசாரணையும் சூடுபிடித்து வருகிறது.

இந்த பங்களாவில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் சசிகலா தங்கியிருந்த அறைகளில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது. இவ்வழக்கில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை வேகப்படுத்தியுள்ளனர். இவ்வழக்கில் பறிமுதல் செய்த 8 செல்போன்களை விசாரணைக்காக தங்களிடம் வழங்க வேண்டுமென சி.பி.சி.ஐ.டி. தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில், பல முக்கிய புள்ளிகள் சிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

மேலும், கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது துணை முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் கொடநாடு கொலை, கொள்ளை சம்பவங்களுக்கு காரணமான முக்கிய குற்றவாளிகளை கைது செய்யக்கோரி தமிழகம் முழுவதும் வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுமென அறிவித்துள்ளதும் கவனிக்கத்தக்கது. ஊழல், சொத்துக்குவிப்பு புகார், கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை மற்றும் நெடுஞ்சாலைத்துறை டெண்டர் முறைகேடு விவகாரம் என அடுத்தடுத்து அ.தி.மு.க.வின் முக்கியப் புள்ளிகளை பிரச்னை மையம் கொண்டுள்ளது. விசாரணை மேலும் தீவிரமடையும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அச்சத்தால் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கலக்கத்தில் உள்ளனர்.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

### ஆ.சீ.அருணகிரி - இரா.பொன்னுராம் பங்கேற்பு!

# கூட்டுறவு மொத்த பண்டக சாலைகள் தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டம்!

## டி.யு.சி.எஸ்.பத்மநாபன் அறிக்கை!

சென்னை, ஜூலை 14 -

டி.யு.சி.எஸ். தொ.மு.ச. பொதுச் செயலாளர் டி.யு.சி.எஸ். பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ் நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்தொ.மு.ச.வின் அனைத்து பண்டகசாலைகள் நிர்வாகிகள் கூட்டம் தொ.மு.ச பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் (மாநிலங்களவை உறுப்பினர்) அவர்களின் அனுமதியோடு 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணியளவில் திருப்பத்தூர் மாவட்டம்,ஏலகிரி மலை தாயலூர் கிராமத்தில் உள்ள ஒ.எம்.சி.ஏ.கேம்ப் செண்டர் அரங்கில் மாநிலத்தலைவர் து.பிச்சை தலைமையில் மாநில பொருளாளர் இரா.பழனியப்பன்,மாநில துணைத்தலைவர் மரு.இரா.இராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் தொ.மு.ச பேரவையின் அலுவலக செயலாளரும், உழைப்பாளி ஆசியருமான ஆ.சீ. அருணகிரி, தொ.மு.ச. பேரவை செயலாளர் இரா. பொன்னுராம் ஆகியோர் ஆலோசனைவழங்கி பேசுகின்றனர். மாநிலத் துணைத் தலைவர் கே. மலர்க்கொடி நன்றி கூறுகிறார். தாங்கள் சங்க நிர்வாகிகளுடன் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: 1)முத்தமிழறிஞர், பாட்டாளிகளின் பாதுகாவலர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்.2) சங்கத்தின் வளர்ச்சி. பணியாற்றும் நிறுவன வளர்ச்சி மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த கோரிக்கைகள் பதிவாளர் அவர்களுக்கும், அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும். 3) தலைவர் மற்றும் நிர்வாகிகளால் கொண்டு வரப்படும் அவசர, அவசிய தீர்மானங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப் படுகிறது.

இவ்வாறு டி.யு.சி.எஸ். பதம்நாபன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### டேராடூனில் இன்று

# அனைத்து மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்கிறார்!

சென்னை, ஜூலை 14 -

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியா தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு முதன்மைச் செயலாளர். ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் இன்று (14.07.2023) உத்திரகாண்ட் மாநிலம், டேராடூனில் நடைபெறும். அனைத்து மாநில சுகாதாரத் துறை அமைச்சர்களுடனான, 15வது சுகாதார மாநாட்டில்கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசின் 14 கோரிக்கைகளை எடுத்துரைக்கவுள்ளனர்.

அதன் விவரம் வருமாறு;

1) மருத்துவக் கல்வி சேர்க்கை கொள்கை மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்விற்கு (நீட்) எதிர்ப்பு

2) கோயம்புத்தூரில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்க அனுமதி கோருதல்

3) 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவுதல்

4) தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் புதிய அரசு

செவிலியர் கல்லூரிகள் நிறுவுதல்

5) மருத்துவ பட்ட மேற்படிப்பு கல்வி வரைவு ஒழுங்குமுறை விதிகளுக்கு ஆட்சேபணை

6) சமீபத்தில் வெளியிடப்பட்ட மருத்துவ பட்டதாரி படிப்புகளுக்கான உத்தேச பொது கலந்தாய்வுக்கு ஆட்சேபணை

7) தேசிய மருத்துவ ஆணையத்தின் (மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களை நிறுவுதல், மதிப்பீடு மற்றும் மருத்துவக் கல்விக்கான இடங்களில் அதிகரிப்பு, 2023) வரைவுக்கு ஆட்சேபணை பொது மக்களின் கருத்துக்காக சமீபத்தில் வெளியிடப்பட்டது.

8) காலியாக உள்ள அனைத்து இந்திய எம்.பி.பி.எஸ் இடங்கள் மாநிலத்திற்கு ஒப்படைக்கப்படும்

9) 50 புதிய கிராமப்புற ஆரம்பசுகாதார நிலையங்கள் நிறுவுதல்

10) 50 புதிய நகர்புற ஆரம்பசுகாதார நிலையங்கள் நிறுவுதல்

11) 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

12) 1000 புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

13) 1000 புதிய கிராமப்புற துணை சுகாதார நிலையங்கள் நிறுவுதல்

14) சென்னை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கூடுதலாக 100 படுக்கைகள் கொண்ட முக்கிய மருத்துவ சேவைக் கட்டிடம் நிறுவுதல்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆ. சீனுவாசன்

ஜூலை 14 (2016)



இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பேரூர்ச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், அச்சிறுப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய இயக்குநர் ஆகிய பதவிகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


### இராயபுரத்தில் தொழிற் பயிற்சி முடித்த

# 40 மாணவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் பணி நியமன ஆணைகள்!

## ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூலை 14 -

இராயபுரம் அரசு தொழிற் பயிற்சி முடித்த மாணவர்களில் எல்.அண்டு டி நிறுவனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 40 மாணவர்களுக்கு பணி நியமன ஆணையை ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று தலைமை செயலகத்தில் காணொலி வாயிலாக இராயபுரம் சட்டமன்ற தொகுதி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் ரூபாய். 34.65 கோடி மதிப்பீட்டில் தொழில்நுட்ப மைய தொடக்க விழாவினை துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து தொடக்க விழாவிற்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் சென்று தொழிற்பயிற்சி மூலம் நன்கு பயிற்சி பெறும்படி மாணவ, மாணவிகளுக்கு ஆலோசனை கூறினார். எல்.அண்டு நிறுவனம் மூலம் 40 மாணவர்களுக்கு பணி நியமன ஆணையை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி வழங்கினார். இதில் பயிலும் மாணவர்களுக்கு நூறு சதவிகிதம் உலக அளவிலான தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இதில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ் மற்றும் வார்டு கவுன்சிலர் வேளாங்கண்ணி , நிர்வாக இயக்குனர் மற்றும் ஐ.டி.ஐ. தலைமை ஆசிரியர் ராதாகிருஷ்ணன், எல். அண்டி பொது மேலாளர், வட்டாசியர் ஆகிய அனைவரும் கலந்து கொண்டு விழாவில் சிறப்புரை ஆற்றி விழாவினை இனிதே துவக்கி வைத்தனர்.



சோழிங்கநல்லூர் நீலாங்கரை, சென்னை நடுநிலைப் பள்ளியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, ரூபாய். 67 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுமானப் பணிகளை, முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ ஆகியோர் நேற்று துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில், பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் சோமு, நீலாங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எட்டியப்பன், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சில வரிச் செய்திகள்

### தென்காசி தொகுதியில் மறு வாக்கு எண்ணிக்கை:

## காங்கிரஸ் வேட்பாளர் பழனி நாடார் வெற்றி!



தென்காசி,ஜூலை.14-

கடந்த 2021ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது தென்காசி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க.வின் கூட்டணி கட்சியான காங்கிரஸ் வேட்பாளர் பழனி நாடார் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளரான செல்வ மோகன்தாஸ் பாண்டியனை விட 370 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், அறிவிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கைக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. எனவே தபால் வாக்குகளையும், மின்னணு எந்திரத்தில் பதிவான வாக்குகளில் 28 முதல் 30 சுற்றுகள் வரை பதிவான வாக்குகளை மறுஎண்ணிக்கை நடத்த வேண்டும் என ஐகோர்ட்டில் செல்வமோகன் தாஸ் பாண்டியன் வழக்கு தொடர்ந்தார். அதனை விசாரித்த நீதிபதி, தபால் ஓட்டுக்களை மறுஎண்ணிக்கை நடத்த உத்தரவிட்டார்.

அதன்படி தென்காசி மாவட்ட ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் இன்று தபால் ஓட்டுகள் மீண்டும் எண்ணப்பட்டன. மறு வாக்கு எண்ணிக்கையின் முடிவில் பழனி நாடார் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பழனி நாடார் 1606 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் செல்வ மோகன்தாஸ் 673 வாக்குகளும் பெற்றுள்ளனர். அதிகாரப்பூர்வ அறிவிப்பானது, அறிக்கையாக தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

### சென்னை மெட்ரோ ரயில் திட்டம்:

## ரூ.1,063 கோடியில் ஒப்பந்தம்!



சென்னை,ஜூலை.14-

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் கட்டம் 2 வழித்தடம் 3ல் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்க ரூ.1,063 கோடியில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. வழித்தடம் 3ல் மூலக்கடை, செம்பியம், பெரம்பூர் மார்க்கெட் பகுதிகளில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. பெரம்பூர் மெட்ரோ கிராஸ் ஓவர் நிலையம் என 4 சுரங்கப்பாதை மெட்ரோ நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் தி. அர்ச்சுனன் (திட்டங்கள்) மற்றும் தினேஷ்சந்திரசோமா கூட்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் பிரணவ் குமார் (தொழில்நுட்பம்) ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

## இன்று விண்ணில் பாய்கிறது சந்திரயான் 3 விண்கலம்!

சென்னை,ஜூலை.14-

நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆராய்வதற்காக சந்திரயான்3 விண்கலம், இன்று விண்ணை நோக்கி பாய உள்ளது.



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோ சந்திரயான்3 விண்கலனை ஜிஎஸ்எல்வி மார்க் 3 ராக்கெட்வுடன் இணைத்துள்ளது. தற்போது ஜிஎல்எல்வி மார்க்3 எல்.எம்.வி.3 என அழைக்கப்படுகிறது. சந்திரயான்3 திட்டம் நிலவின் தென் துருவ ஆய்வை நோக்கமாக கொண்டுள்ளது. ராக்கெட்டின் மேல் உள்ள பேலோட் ஃபேரிங் லேண்டர், ரோவர் ப்ராபல்ஷன் மாட்யூலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. விண்கலம் லேண்டர், ரோவரை சுமந்து சென்று நிலவின் மேற்பரப்பில் தரையிறக்கும்.

### உலகம் முழுவதும் கடந்த ஆண்டு

## 240 கோடி பேர் உணவின்றி தவிப்பு!

### ஐ.நா. வெளியிட்ட அதிர்ச்சி தகவல்!



ஜெனிவா,ஜூலை.14-

உலகம் முழுவதும் கடந்த ஆண்டு 240 கோடி பேர் போதிய உணவின்றி தவித்ததாக ஐ.நா. அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

உலக உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கள் தொடர்பான ஆய்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் செயல்படும் 5 அமைப்புகள் வெளியிட்டுள்ளன. அதில் உலகம் முழுவதும் கடந்த ஆண்டு 240 கோடிக்கும் அதிகமான மக்கள் போதிய உணவு கிடைக்காமல் தவிப்புக்கு ஆளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் போர் மற்றும் கொரோனா காரணமாக பசியால் தவிப்போர் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஐ.நா. கூறியுள்ளது.

## ஆசிய தடகள சாம்பியன்ஷிப்!

### இந்தியாவுக்கு 3வது தங்கம்!



புதுடெல்லி,ஜூலை.14-

ஆசிய தடகள சாம்பியன்ஷிப் விளையாட்டு நேற்று இந்தியாவுக்கு 3வது தங்கம் கிடைத்துள்ளது.

மும்முறை தாண்டுதலில் கேரளாவை சேர்ந்த அபுபக்கர் அப்துல்லா தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். 16.92 மீட்டர் தூரம் தாண்டி புதிய சாதனையுடன் அபுபக்கர் அப்துல்லா தங்கப்பதக்கம் வென்றார்.